Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 285

வெள்ளிக்கிழமை
06 செப்ரெம்பர் 2024

ஆவணி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தனக்கு சப்போர்ட் பண்ணாதவையை ரணிலார் சப்பியெறியத் தொடங்கிட்டார் போல"

## மாற்றத்துக்கு எதிராக வாக்களித்து

# வரலாற்றுத்தவறை செய்யவேண்டாம்

### அநுரகுமார திஸாநாயக்க தமிழர்களிடம் கோரிக்கை



கொழும்பு, செப்ரெம்பர் 6

தமக்கு மாற்றம் தேவை என்று மக்கள் சிந்தித்துவிட்டனர். எனவே மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டுவரத் தயாராகிவிட்டனர். வடக்கு மக்கள் அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்துக்கு பலம் சேர்க்கவேண்டும். வரலாற்றுத் தவறுகளைச் செய்திடவேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் என ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

15

## ஊடகப் படுகொலைகளுக்கு முழுமையான விசாரணைகள்

யாழ்ப்பாணம், செப். 6

உதயன் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை என்பன தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

15

## போதைப்பொருள்களின் பின்னணியில் அரசியல்

### அனைத்தையும் துடைத்தெறிவேன் அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

நாட்டில் இன்று பெருமளவான போதைப்பொருள் கடத்தல்களின் பின்னணியில் அரசியல்வாதிகளே இருக்கின்றனர். ஆட்சிக்கு வந்ததும், போதைப்பொருள்

15

## போர்க்குற்றவாளிகளை நீதிமன்றுகள் தண்டிக்கும்!

### அநுரகுமார விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 6

போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதில் நான் அப்போதும், இப்போதும் உறுதியாகவுள்ளேன். ஆனால் போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனைகள் நீதிமன்றங்களுடன் தொடர்

15

## விக்னேஸ்வரன் சொல்வதை தமிழர்களே கேட்பதில்லை!

### கண்டுகொள்வேனா நான்? அநுரவின் நகைச்சுவை

யாழ்ப்பாணம், செப். 6

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சொல்வதை தமிழர்களே கேட்பதில்லை. நான் அவரையெல்லாம் கண்டுகொள்வேனா? என்று அநுரகுமார தெரிவித்துள்ளார். அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், 'அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவானால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு

15

## தீயில் எரிந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 6

தீயில் எரிந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட இளம் குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

15

## கண்ணிவெடி விபத்தில் நால்வருக்குப் படுகாயம்

### சகலரும் பெண் பணியாளர்கள்

### யாழ். பல்கலைக்கழகத்தின்

## நான்கு மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிப்பு!

விரிவுகள்:- பக். 15

## சங்கானையில் திருட்டுகள்; பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 6

சங்கானை தேவாலய வீதியில் அமைந்துள்ள மூன்று வீடுகளில் இடம்பெற்ற திருட்டுகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

15

## கைவிடப்பட்ட முதியவர் கைதடியில் இணைப்பு!

### உதயன் செய்தியால் உடனடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 6

எந்தவொரு முதியோர் இல்லங்களும் பொறுப்பேற்காத நிலையில் தன்னைக் கருணைக்கொலை செய்யுமாறு கோரிய இ.ஜெயக்குமார் என்ற முதியவர், கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்தில் நேற்று இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

15



### ஐரோப்பிய ஒன்றியத்தின்

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் உதயனுக்கு நேற்றுப் பயணம்

யாழ்ப்பாணம், செப். 6

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று உதயன் பணிமனைக்கு வருகை தந்தனர். செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களில் அவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (அ-ம-125)

## 4 இராஜாங்க அமைச்சர்கள் உடனடியாகப் பதவிநீக்கம்!


கொழும்பு, செப். 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு இராஜாங்க அமைச்சர்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அந்தப் பதவிகளில் இருந்து நீக்கியுள்ளார். துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் என் பக்கமே



**கொழும்பு, செப்.6**
**தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளபோதும் இந்த நாட்டின் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவு எனக்கு இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லப் போகிறோமா அல்லது மாற்றப் போகிறோமா என்பது தான் இப்போதைய கேள்வி.
அரசின் வருவாய் மற்றும் செலவினங்களின் தற்போதைய அளவுகோல்களை மாற்றமுடியாது. வரித் திருத்தங்கள் செய்யப்படலாம் என்றாலும், அதற்கு முழு அளவுகோல்களைப் பூர்த்தி செய்யவேண்டும். கடந்த காலத்தில் செய்த தவறுகளை மீண்டும் செய்ய வேண்டுமா என்று வினவவிரும்புகிறோம். எனவே, நாம் இப்போது ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச)

# போலி வாக்குறுதிகளால் ஏமாற்றப்படும் மக்கள்

## பவ்ரல் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.6
அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு என்ற அறிவிப்பின் மூலம் அரசாங்கம் பொதுமக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

PAFFREL

இதுதொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,
அமைச்சரவை எதிர்வரும் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மூன்று தீர்மானங்களை எடுத்துள்ளது. அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கும், வரிகளைக் குறைப்பதற்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்துச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு 14 மில்லியன் அரசாங்க ஊழியர்களை கவருவதற்கான முயற்சி.
சில மாதங்களுக்கு முன்னரே அரசாங்கம் ஒருசதம் கூட சம்பளத்தை அதிகரிக்கமுடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் மூலம் அரசாங்கம் தெரிவித்திருந்தது.சம்பள உயர்வை வழங்கும் அளவுக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?உத்தேச சம்பள அதிகரிப்பை வழங்குவது என்றால் அரசாங்கத்துக்கு மாதமொன்றிற்கு 20 மில்லியன் தேவை - என்றார். (ச)

# தமிழர்களை அடிமையாக்கவா சஜித்துக்கு சுமந்திரன் ஆதரவு?

## கஜேந்திரன் எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம், செப். 6
சுமந்திரன் ஒரு பொய்யர். இலங்கைத் தீவில் தமிழ் மக்களை அடிமையாக்கவே சஜித் பிரேமதாஸவுக்கு தனது ஆதரவை தமிழரசுக் கட்சி மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பு வரைவை மக்களை ஏமாற்றிக் கொண்டு வருவதே சுமந்திரனின் திட்டம். சமஷ்டி என்ற உத்தரவாதத்தை வழங்காத சஜித்துக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.
அண்மையில் கூட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடனான சந்திப்பில் கூட ஏக்கிய இராச்சிய வரைவை நியாயப்படுத்த முனைந்தபோது அதனை அந்தக் கூட்டத்தில் நாம் நிராகரித்தோம். தமிழ் மக்களை ஏமாற்றுவதே சுமந்திரனின் திட்டம். அதை அவர் மெதுவாக அரங்கேற்றி வருகின்றார் - என்றார். (ஒ-125)

# அபிவிருத்தி அலுவலர்கள்; அரசாங்கம் பாராமுகம்!

## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.6
அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுக்கான செயற்பாடுகள் குறித்து அரசாங்கத்தால் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கை பூராகவும் மத்திய அரசாங்கத்துக்கு கீழும், மாகாண சபைகளுக்கு கீழும் 97 ஆயிரத்து 800 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றார்கள். இவர்கள் எவ்வளவு காலம் கடமையாற்றினாலும் அதில் பதவி உயர்வுக்கான செயல்முறைகள் இல்லை. அவர்கள் 30 வருடம் சேவையில் இருந்தாலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் தகைமையில் முதலாவது தரத்துக்கு மாத்திரமே செல்லமுடியும். எனவே இவர்களுக்காக பதவி உயர்வுக்கான செயற்பாடுகளை தயாரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ச)



# சீலரத்தின தேரர் யாழில் பரப்புரை

யாழ்ப்பாணம், செப்.6
ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தரமுல்ல சீலரத்தின தேரர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்.
யாழ். நகரப் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு, துண்டுப்பிரசார விநியோகத்தில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஒரே நாடு ஒரே நீதி உரிமையை வென்றெடுக்கும் முகமாக தமது கட்சி தேர்தலில் போட்டியிடுவதாகவும் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (ச-23)

# ரூ. 2000 கொடுப்பேன்

## திலித் ஜயவீர உறுதியளிப்பு

கொழும்பு, செப்.6
தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்த பட்ச சம்பளத்தை 2,000 ரூபாவாக அதிகரிக்கக்கூடிய மூலோபாய வேலைத்திட்டம் தன்னிடம் உள்ளது சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர், திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.
பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தோட்டப்புறத்தின் பாரம்பரிய அரசியல் முகாம்கள் உடைக்கப்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# மஹிந்தவுக்காக நாமலை ஆதரிப்பது சாத்தியமற்றது

## நிமால் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6
மஹிந்த ராஜபக்ச போரை முடித்தார் என்பதற்காக அவரின் மகனையும் முன்னிலைப் படுத்தவேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது. அதற்கு நாம் உடன்படமாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஜனாதிபதிப் பதவியானது நகைச்சுவைத் தனமானவர்களின் கைகளுக்குள் சென்றுவிடக்கூடாது. சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ரணில் விக்கிரமசிங்கபோன்ற அனுபவம்மிக்கவர்களே அப்பதவியை வகிக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ச தீவிரவாதத்துக்கு முடிவுகட்டியதாலேயே இன்றளவிலும் அவரை நேசிக்கிறோம். அவர் போரை முடித்தார் என்பதற்காக அவரின் மகனை ஆதரிக்க வேண்டிய அவசியமில்லை - என்றார். (ச-25, 44)

# அள்ளிச் செலவளிக்கும் அநுர மக்களுக்கு என்ன செய்தார்?

## ரிஷாத் கேள்வி



வவுனியா, செப்.6
தேர்தலுக்காக கோடி கோடியாக பணத்தைக் கொட்டும் அநுரகுமார திஸாநாயக்க கடந்த காலத்தில் ஏன் ஒரு சின்ன உதவியாவது மக்களுக்கு செய்ய முடியாமல் போனது ?
-இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். வவுனியா, வைரவபுளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். சஜித் பிரேமதாஸ 300 க்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான விடயங்களைச் செய்து உயிர்களைப் பாதுகாக்க உதவியவர். 400 பாடசாலைகளுக்கு சிமாட் வகுப்பறைகளை கையளித்தவர். ஆனால் அநுரகுமார திஸாநாயக்காவால் ஏன் மக்களுக்கு உதவ முடியாமல் போனது. மக்கள் மீது உண்மையான பாசம் இருந்தால் ஏன் செய்யவரவில்லை. இன்று அவர்களது தேர்தல் மேடைகளை பாருங்கள். கோடி கோடியாக பணம் கொட்டுகிறார்கள். அப்படியான அநுரகுமாரவால் ஏன் ஒரு சின்ன உதவியாவது மக்களுக்கு செய்ய முடியாமல் போனது- என்றார். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஆட்சிக்கு வருவதைத்தடுக்க அச்ச உணர்வை ஊட்டுகிறார்கள்!



## அநுரகுமார ஆதங்கம்

கொழும்பு, செப்.6

**எம்மால் ஆட்சியைப் பிடிக்கமுடியாது என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எரிவாயு இல்லாமல் போய்விடும், எல்லாம் முடிந்துவிடும் என்று மக்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

எல்பிட்டியவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தோல்வியடைகின்ற தலைவர்கள் சதாகாலமும் சமூகத்தில் ஒரு பீதியை ஏற்படுத்துவார்கள். அவர்கள் வெற்றிபெறாவிட்டால் தேசம் ஆபத்திலாம். பொருளாதாரம் ஆபத்திலாம். ஆனால் வெற்றிபெற்ற அவர்கள்தான் இந்த நாட்டையும் மக்களையும் ஆபத்தில் தள்ளிவிட்டவர்கள்.

இப்போது சஜித் அணியைச் சேர்ந்தவர்களும் நாங்கள் வந்தால் நாடு ஆபத்தில் எனக்கூறுகிறார்கள். அந்த எல்லோரையும் விட இந்த நாடு பற்றியும், நாட்டில் உள்ள மக்கள் பற்றியும் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எமக்குப் பொறுப்பு இருக்கின்றதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டதன் பாதக விளைவுகளைத்தான் நாங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நாட்டு மக்கள் இனிமேலும் தேர்தல் ஏமாற்று வேலைகளில் மாட்டிக்கொள்ள மாட்டார்கள். சிறிய சிறிய கொடுப்பனவுகளால் இந்நாட்டு மக்களை தொடர்ந்தும் ஏமாற்றமுடியாது என்பது நிரூபணமாகியிருக்கிறது. அவர்கள் இப்பொழுது பழக்கங்களை கைவிட்டு தேசிய மக்கள் சக்தியைச் சுற்றி குழுமிக் கொண்டிருக்கிறார்கள். அதனை ரணிலால் மீளத்திருப்ப முடியாது - என்றார். (ஒ-இ)

# தேர்தல் அறிக்கையில் புதிதாக எதுவுமில்லை

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு , செப். 6

கடந்த மாதம் வேட்பாளர்களின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. புதிய மொந்தையில் பழைய கள்ளு என்பது போல 75 வருட காலமாக இந்த நாட்டின் தோல்விக்குக் காரணமான அதே ஒற்றையாட்சி அரசியலமைப்பையும், அதே பௌத்த மதம் அரச மதம் என்பதையும் பேணிப் பாதுகாக்கும் நிலைப்பாடுகளுடன் தான் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்திருக்கின்றன.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இவற்றைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் மக்கள் மட்டத்தில் கருத்துருவாக்கங்களை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அவையிலுள்ள மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். எனினும், யாரும் இதனைக் கருத்திலெடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு எதிரான அழுத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கையாக இருக்கின்றோம் - என்றார். (எ-22,66)

# ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா நடுநிலைமை

கொழும்பு, செப்.6

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலைமை வகிப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் சில வேட்பாளருக்கு ஆதரவு வழங்குகின்றேன் என்று வெளியான தகவல்களில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்காமல் நடுநிலை வகிப்பதற்குத் தீர்மானித்துள்ளேன். கடந்த காலத்தைப் போன்று, எதிர்காலத்திலும், இவ்வாறான நிலைப்பாடே உள்ளது.

இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் தற்போது போன்று நிலையற்ற தன்மை, முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. பாரதூரமான இந்த நிலைமையை அறிந்து அனைத்து வாக்காளர்களும் செயற்படவேண்டும்.

தனிநபர் தொடர்பில் கருத்திற்கொள்ளாது, வேட்பாளர்கள் முன்வைத்துள்ள திட்டங்கள், அதை நடைமுறைப்படுத்தும் விதம் மற்றும் இயலுமை என்பன தொடர்பாகச் சிந்தித்து வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்த வேண்டும் - என்றார். (எ-45)

# ஜனநாயகத்தைக் காக்கவே புதிய அரசியல் கூட்டணி!

## ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



கொழும்பு, செப்.6

ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியல் சக்தி தலைதூக்கியுள்ளது என்றும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

69 இலட்சம் மக்களின் ஆணை தம்முடன் தான் உள்ளதென்றும் தேசிய கூட்டணியாக எழுச்சி பெறுவோம் என்றும் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயலாளராக ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட்டுள்ளார். அந்த நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# புதினம் தெரியுமோ?

அம்பதிலும் ஆசை வரும், ஆசை வந்தால் நாசம் வரும். இப்பிடி அம்பதில ஆசை வந்த சுவிஸ்காரர் ஒருத்தர், 45 லட்சத்தைப் பறிகுடுத்த செய்தியை நேற்றை யான் பேப்பரில வாசிச்சிருப்பியள். செய்தியில எல்லாத்தையும் சொல்லேலாது எண்டதால அதைப்பற்றி பட்சியாவது சொல்லத்தானே வேணும். ஒரு இளம் பிள்ளையின்ர ரிக்ரொக் படங்களையும், அதே பேரில இருக்கிற இன்னொரு பிள்ளையின்ர வங்கிக் கணக்கிலக்கத்தையும் பாவிச்சு ஒரு 47 வயது அன்ரி ஆடின மங்காத்தாவில இந்த சுவிஸ்மாமா கவிண்டு போட்டார். நாறல் மீனைக் கண்ட பூனை மாதிரி, இளம்பிள்ளையின்ர வீடியோக்கள், படங்களைப் பார்த்தவுடன சுவிஸ் மாமாவுக்கு எல்லாமே மறந்து போய், 45 லட்சத்தை விட்டெறிஞ்சிருக்கிறார். ஆனால் காசைப் போட்ட கொஞ்சநாளில வீடியோக்கள், படங்கள் வாறது நிக்கத்தான் சுவிஸ்மாமாவுக்கு சுயநினைவு வந்திருக்குது. அதுக்குப் பிறகுதான் ஆள் அடிச்சுப்பிடிச்சுக் கொண்டு, பிளைட்ல வந்து யாழ்ப்பாணப் பொலிஸில முறைப்பாடு குடுத்து, இப்ப காசை ஆட்டையைப் போட்ட அன்ரி அதை திருப்பித் தாறன் எண்டு சொல்லியிருக்கிறா.

இந்தக் கேஸில பொலிஸ் முதல்ல ரிக்ரொக் செய்யிற பிள்ளைதான் குற்றவாளி எண்டு நினைச்சது, ஆனால் விசாரிச்சுக் கொண்டு போகேக்கதான் ரிக்ரொக் செய்த பிள்ளையையும், அந்தப் பிள்ளையின்ர பெயரோட இருக்கிற இன்னொரு பிள்ளையையும் பகடையாக வைச்சு 47 வயது அன்ரி ஆடின 'கேம்' தெரியவந்தது. அப்பிடி அந்த அன்ரி இந்த சுவிஸ்மாமாவுக்கு ஏன் பொறி வைச்சவா எண்டதுக்கும் ஒரு காரணம் இருக்கு.

ஆறேழு மாதத்துக்கு முதல் இதே சுவிஸ்மாமா யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார். அப்பிடி வரமுதலே இந்த 47 வயது அன்ரிக்கும் அவருக்கும் போன் தொடர்பு இருந்திருக்கு. இந்த அன்ரியை ரண்டாம் தாரமாக் கட்டுறன் எண்டு சொல்லி, எல்லா இடமும் உந்த சுவிஸ் மாமா கொண்டு திரிஞ்சிருக்கிறார். கடைசியா நயினாதீவு அம்மன் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போய், மோதிரமும் அந்த அன்ரிக்குப் போட்டுவிட்டிருக்கிறார். அதால அவரை நம்பி, அவர் கூப்பிட்ட இடமெல்லாம் அன்ரியும் போயிருக்கிறா. ஆனால் சுவிஸ்மாமா யாழ்ப்பாணத்தை விட்டுப் போனபிறகு அன்ரியைக் கைகழுவி விட்டிட்டார். அந்த ஆத்திரத்தில அவரை என்ன செய்யலாம் எண்டு அன்ரி யோசிச்சிருக்கிறா. சுவிஸ்மாமாவுக்கு இளம்பிள்ளையளில 'வீக்' இருக்கெண்டது அவாக்குத் தெரியும். அதால, அவரின்ர வட்ஸப்புக்கு தனக்குத் தெரிஞ்ச இளம்பிள்ளையொண்டின்ர ரிக்ரொக் படங்கள், வீடியோக்களை அனுப்பி இருக்கிறா. சுவிஸ்மாமாவும் நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு இளிக்க, அதை வைச்சே ஆளிட்ட இன்னொரு பிள்ளையின்ர எக்கவுண்ட் நம்பரை வைச்சு அன்ரி காசைக் கறந்திருக்கிறா. ஒரு வகையில பாத்தால் சுவிஸ்மாமா மாதிரியான சேமனைகளுக்கு இப்பிடித்தான் செய்ய வேணும்.ஆனால் இன்னொரு பிள்ளையை பணயம் வைச்சு செய்யிறதும் பிழை. அதோட ரிக்ரொக், இன்ஸ்டாகிராம், பேஸ்புக் எண்டு படங்கள், வீடியோக்களை போடுற பொம்பிளைப் பிள்ளையள், அதுகளை வைச்சு வேற ஆரும் எப்பிடியெல்லாம் பிழையாப் பாவிப்பினம் எண்டதையும் இந்த சுவிஸ்மாமான்ர சம்பவத்தோட உணரவேணும். இல்லாட்டி இப்பிடி இன்னும் நிறைய அன்ரிமார், உங்கட படங்களைக் காட்டி வேற வெளிநாட்டுக்காரருக்கு வலைவிரிச்சு, காசு பறிக்கலாம். அது ஒண்டுமே தெரியாத எங்கட பொம்பிளைப் பிள்ளையளின்ர வாழ்க்கையையும் பாதிச்சுப் போடுமெல்லோ . ரிக்ரொக் செய்யிற பிள்ளையளே, கொஞ்சம் கவனம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.6

ஏழாலை மாதிரை ஞானவைரவர் ஆல யத்தின் புதிய கோபுர அடிக்கல் நடுகை வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.04 மணி முதல் காலை 7.34 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (எ-25-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாத கமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலமும் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செல வுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வியா பாரத்தில் இலாபம் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர் பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் – மனை விக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மன அமைதியை பாதிக்க வாய்ப்பு உள்ளது என்ப தால் அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லை கள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத் துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட் டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகி விடும்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்புக் குறை யும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற் றுவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். வயிறு தொடர்பானபிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

## வைரவர் உற்சவம்



யாழ்ப்பாணம், செப்.6

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் இருபத்தேழாம் நாளான வைரவர் உற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. (எ-ரி-66)

## விநாயகர் சதுர்த்தி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப்.6

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநா யகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வரப்பூசையும் இடம்பெறு மென ஆலயபரிபாலத்தினர் அறிவித்துள்ள னர். (எ-25-17)

+++

யாழ்ப்பாணம், செப்.6

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத் தில் ஆவணி விநாயகர் சதுர்த்தியை முன் னிட்டு நாளை சனிக்கிழமை காலை விசேட பூசைகள் இடம்பெற்று விநாயகப்பெருமான் வீதி உலா வருவார் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-25-17)

+++

யாழ்ப்பாணம், செப்.6

வண்ணை சாந்தையாமடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன் னிட்டு நாளை சனிக்கிழமை சங்காபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-17)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்.போதனா மருத்துவமனை, யாழ். மாநகர சபை மற்றும் யாழ். சுகாதார மருத்துவ அதி காரி பணிமனை ஆகியவை இணைந்து இன் டர்நேசனல் ஹெல்த் ஒகனைசேசன் இன் அனுசரனையுடன்சேவ்ஏ லைப்நிறுவனத்தின் ஏற்பாட்டில் கோவில் வளாகத்தில் அமைந் துள்ள சுகாதார பணிமனையில் சப்பறம், தேர், தீர்த்தம்மற்றும் பூங்காவனம் ஆகிய நான்கு நாள்கள் இரத்ததான முகாமை சிறப் பாக நடத்தியிருந்தன. இதன்போது 135 குருதிக்கொடையாளர்கள் இரத்த தானம் செய் திருந்தனர். (எ-25-100)

## கலந்துரையாடல்

கொழும்பு, செப்.6

இந்திய பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த 19 பேர் கொண்ட குழுவினர் இணைச்செயலாளர் விஜய் நெஹ்ரா தலைமையில் கல்விச்சுற்றுலா வொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள னர். இவர்கள் கடற்படைத்தளபதிகளுடன் கலந்து ரையாடல்களில் ஈடுபட்டனர். இந்தக் கலந்துரையா டல்களில் இந்திய தூதரக கடற்படை அதிகாரி கப் டன் ஆனந்தும் கலந்துகொண்டார். (எ-22-6)

## யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப்.6

வட மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவ கார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவச யோகக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை கற்கைநெறி நடைபெறும். இவ்வகுப்பு களில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபா லாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்கள் நடைபெ றும் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் களும் வழங்கப்படவுள்ளன. பயிலவிரும்புவோர் நாளை நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலா ளர் அறிவித்துள்ளார். (எ-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22,400 தடவைகள்

## உலகைச் சுற்றி



இலட்சக்கணக்கான மக்களின் அன்றாடப் பயணங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கவனித்து, எமது தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கை முழுவதும் 900 மில்லியன் கிலோமீற்றர் இற்கு மேற்பட்ட பயணங்களை நாங்கள் சாத்தியப்படுத்தியுள்ளோம். இது உலகை 22,400 முறை சுற்றி வருவதற்கு சமமாகும்.

ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான கிலோமீற்றர்களை நாம் கடந்து பயணங்களை சேர்க்கின்றோம்

**PickMe™**

முடிவற்ற சாத்தியங்கள்

**Digital Mobility Solutions Lanka Limited**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்துறையினருக்கு பலமான வேலைத்திட்டம்

சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, செப்.6

**எமது நாட்டின் பொருளாதார விருத்திக்கு பங்களிப்பை வழங்குகின்ற தனியார்துறை ஊழியர்களுக்கான பல மான வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்கின்ற மக்கள் வெற்றிப் பேரணி கூட்டத் தொடரின் 39 ஆவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் காலியில் இடம்பெற் றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

பொருளாதார விருத்திக்கு தனியார்துறையின் பங்க ளிப்பு மிகவும் முக்கியமானதாகும். அவர்கள் பணியி டத்தில் செய்கின்ற உன்னதமான பணிக்காக விசேட திட்டங்கள் உண்டு.

இதன் ஊடாக தனியார்துறையினரின் குறைந்தபட்ச சம்பளத்தை 25 ஆயிரம் ரூபாவரை கொண்டு வருவ தற்கான திட்டங்கள் வகுக்கப்படும். அத்தோடு ஊழியர் களின் உரிமைகளை பாதுகாக்கின்ற வகையிலான சேவை கொள்கையும் தயாரிக்கப்படும்என்றார். (எ-இ)

# பதுக்கப்பட்டுள்ள நிதி நாட்டுக்குத் திரும்பும்!

அநுர திட்டவட்டம்

கொழும்பு, செப்.6

வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள நிதி இலங்கைக்கு நிச்சயம் எடுத்துவரப்படும். எமது ஆட் சியில் ஊழல் வாதிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார் கள் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது-

இலங்கையில் கொள்ளையடிக்கப்பட்ட நிதி வெளி நாடுகளில் பதுக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். ஊழல், மோச டிகளை நிறுத்துவதற்கு எமது நாட்டை ஆண்ட எந்த வொரு தலைவருக்கும் அக்கறை இருக்கவில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு தண் டனை வழங்குவதற்கும், சொத்துகளைப் பறிமுதல் செய்வதற்கும் ஆட்சியாளர்களுக்குத் தேவைப்பாடு இருக்கவில்லை. மாறாக ஆட்சியைக் கைப்பற்றுவ தற்காக ஊழல் எதிர்ப்புக் கோஷம் பயன்படுத்தப்பட் டுவந்தது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போதே ஊழல், மோச டிகள் தொடர்பில் அதிகம் பேசப்பட்டன. தான் ஆட் சிக்கு வந்த பின்னர் எவரையும் தப்பிச்செல்ல விட மாட்டேன் என மைத்திரிபால சிறிசேன உறுதியளித் திருந்தார். ஆனால் மைத்திரி ஆட்சிக்கு வந்து சிறிது காலப்பகுதியிலேயே மத்தியவங்கியில் கை வைக் கப்பட்டது. ஊழல்வாதிகளுக்குத் தண்டனை வழங் கப்படவேண்டும், கொள்ளையடிக்கப்பட்ட சொத்து கள் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்ற தேவைப் பாடு மக்களுக்கு உள்ளது.

இது தொடர்பில் மக்களை விடவும் எமக்குக் கூடுதல் தேவைப்பாடு உள்ளது. இதற்குத் தேவையான இரா ஜதந்திர ஏற்பாடுகள், சட்டத் திருத்தம் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ-44)

# பெரமுனவின் கதவுகள் ஒருபோதும் திறக்காது!

கட்சியின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

தமது கட்சி ஊடாக நாடாளுமன்றம் தெரிவாகிவிட்டு புதிய கூட்டணி அமைத்துள்ள தரப்பினருக்கு மீண்டும் கட்சியில் இடமளிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி திட்டவட்டமாக அறிவித் துள்ளது. மொட்டுக் கட்சியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து புதியதொரு கூட்டணியை கட்டியெழுப்பி யுள்ள நிலையிலேயே மொட்டுக் கட்சிச் செயலாளர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

கட்சியைக் காட்டிக்கொடுத்தவர்களுக்கு கட்சியின் கதவு ஒருபோதும் திறக்கப்படமாட்டாது. மக்கள் மொட்டுக் கட்சிப் பக்கமே உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (எ-44)

# ரணிலின் வெற்றியிலேயே நாட்டின் எதிர்காலமாம்!

தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, செப்.6

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி யிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கி யிருக்கின்றது என்று பிரத மர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய சுதந் திர முன்னணி என்ற புதிய அரசியல் கூட்டணியின் ஆரம்ப விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒழுக்கத்துடன் பணி யாற்றுவதன் மூலம் ஒரு நாட்டை வழிநடத்துவதன் மூலம் உருவாக்கக்கூடிய முடிவு வேகமாக இருப்ப தைக் கண்டோம். அராஜகமான ஆட்சியின்றி இருந்த நாட்டில் ஒழுக்கத்தின் மூலம் பொருளாதார முன்னேற் றம் பிறந்தது.

நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் மக்கள் நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்ட புதிய வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இங்கே புதிய தலைமுறை நம்மைப் பார்க்கிறது. அந்த வருங்கால சந்ததிக்காக இந்தப் பயணத்தை மேற்கொள்கிறோம். ரணில் விக்கிரம சிங்கவின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்கா லம் தங்கியுள்ளது - என்றார். (எ-இ)

# பதவியைத் துறந்து சஜித்துடன் இணைவு

கொழும்பு, செப். 6

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித் துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். குறித்த கடிதத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேம தாஸவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக முஸம்மில் குறிப்பிட்டுள்ளார். (ச)

# வடக்கு மக்களின் ஆதரவுடன் அரசு அமைப்பதே நோக்கம்!

தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

தெற்கு சிங்கள மக்களின் பெரும்பான்மையான ஆத ரவை மட்டும் பெறும் அரசொன்று எமக்குத் தேவை யில்லை. வடக்கு மக்களின் ஆதரவையும் பெறக்கூ டிய அரசொன்றை ஸ்தாபிப்பதே எமது எதிர்பார்ப்பா கும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட் பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


வவுனியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமக்கு எப்படியான அரசாங்கமொன்று தேவை? தெற் கில் சிங்கள மக்களின் பெரும்பான்மையை பெற்ற அரசாங்கமா? வடக்கு மக்களின் ஒத்துழைப்பு இல் லாத அரசாங்கமா? இப்படியான அரசாங்கங்கள் அமைந்து பயனில்லை. வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என அனைத்து இன மக்களினதும் நம்பிக் கையை வென்ற அரசாங்கமொன்றே எமக்குத் தேவை. இதற்கு முன்னர் தெற்கில் இருந்தே ஜனாதி பதிகள் உருவாகியுள்ளனர். வடக்கு, கிழக்கு, தெற்கு என அனைவரும் இணைந்து இம்முறை ஜனாதிபதி யொருவரை உருவாக்குவோம். எனவே, ஏனைய பகுதிகளைப்போல வடக்கிலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியைப் பெறவேண்டும். இனவாதத்தை இல்லாதொழித்து இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தி ஆட்சி கட்டியெழுப்பப்பட வேண் டும்-என்றார். (எ-110)

# தமிழரசு ரணிலுடன் இணைந்தே தேர்தல் நடத்தத் தடைபோட்டது!

நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமி ழரசுக்கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக் கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போட் டனர் என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்ட வரைவை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு பொன்னான வாய்ப்பு காணப்பட்டபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கைத் தமிழரசுக்கட்சி யினரும் தங்களின் சொந்த அரசியல் காரணங்களுக் காகத் அதைத் தவறவிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி பல்வேறு தருணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழு மையாக நடைமு றைப்படுத்துவது பற்றியும் அதிகமா கப் பேசுகின்றது. ஆனால் செயற் பாட்டில் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை அக்கட்சியினர் கொண்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றது. இந்த உண்மையை நான் சொன்னால், எனக்கு தமிழ்ச் சினிமாத் திரைப்படங்களில் வரும் 'வில்லன்' போன்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால், தமிழ் மக்களின் உண்மையான வில்லன் கள் யார் என்பதை தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சகுனியாட்டமும் வாக்கெனும் ஆயுதமும்

ஆட்சியாளர்கள் மக்களை இன்னமும் முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றனர். பாரம்பரியத் தேர்தல் சடுகுடு ஆட்டங்களை ஆடினாலே போதும், வெற்றியைப் பெற்றுவிடலாம் என ஆட்சியாளர்கள் நம்புகின்றனர். ஆனால் இப்போதுள்ள தலைமுறை எப்படிச் சிந்திக்கின்றது என்பதைப்பற்றி துளியும் எண்ணம் இல்லாதவர்கள் ஆட்சியாளர்களாக மீண்டும் வரக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் வாக்களிப்பு – அரச பணியாளர்களுக்கான வாக்களிப்பு நாளுக்கு முதல் நாள் அரச பணியாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் வெளிவருகின்றது. இந்த நாட்டின் 7 சதவீதமாக உள்ள அரச பணியாளர்களின் சம்பளத்தை அடுத்த ஆண்டிலிருந்து 24 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையில் அதிகரிப்பதாகவும், வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவாக 25 ஆயிரத்தை வழங்குவதாகவும் ரணில் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதே அரசாங்கம்தான், அரசாங்கப் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரிப்போராடிய காலங்களில் எல்லாம், அரசாங்கப் பணியாளர்கள் நாட்டுக்குச் சுமை என்று கூறி அவர்களின் மனதை நோகடித்திருந்தது. சம்பள உயர்வுகோரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது அவர்கள் மீது தண்ணீரை விசிறி ஓட ஓடக் கலைத்திருந்து ' சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்றும் சம்பளத்தை அதிகரித்தால் வரியை உயர்த்தவேண்டியிருக்கும் ' எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், நிதி அமைச்சின் செயலாளரும் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்கள். சர்வதேசநாணயநிதியத்துடனான ஒப்பந்தத்துக்கு அமைவாக அரச பணியாளர் களின் சம்பள உயர்வு சாத்தியமில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு தபால் மூல வாக்களிப்புக்கு முதல்நாள் அரசாங்கப் பணியாளர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி முதல் சம்பளம் உயர்த்தப்படுவதாக அரசாங்கத்தின் அறிவிப்பு வெளியிடப்பட்டது. தபால்மூல வாக்களிப்புக்கு முதல் நாள் இவ்வளவு தொகை சம்பள அதிகரிப்பை அறிவிக்கமுடியும் என்றால், அவர்கள் போராடியபோதே அந்த அதிகரிப்புக்கு இணங்கியிருக்கலாமே. அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டபோது, தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாமல் பணிக்கு வந்தோருக்கு கொடுப்பனவு வழங்குவதாக அறிவித்து அரச பணியாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது ரணில் அரசாங்கம். இப்படிப்பட்ட ரணில் அரசாங்கம்தான் எதிர்வரும் ஜனவரியிலிருந்து அரச பணியாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என வாக்குறுதியளித்தவுடன் அரச பணியாளர்கள் முதல்கொண்டு மக்கள் வரையில் தமக்கு வாக்கிடுவார்கள் என்று நம்புகின்றது. ஆட்சியிலிருந்தபோது செய்யாதவர்கள், ஆட்சிக்கு மீண்டும் வருவதற்காக கொடுக்கும் வாக்குறுதிகளை நம்புவதற்கு மக்கள் இன்னமும் முட்டாள்கள் அல்ல என்பதை இந்தத் தேர்தல் முடிவுகளுடன் ரணில் அரசாங்கம் உணர்ந்து கொள்ளும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நாட்டின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கப்போவதாக ரணில் அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆனால், அரச பணியாளர்களுக்கு வாழ்க்கைச்சுமைக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவை அறிவித்ததன் மூலம், அந்தக் கொடுப்பனவை உயர்த்தி வழங்குவதாக தெரிவித்ததன் மூலம் மக்களுக்குச் சொல்லும் செய்தி தெளிவானது. அதாவது நாட்டில் இப்போதுள்ளதைவிடவும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்போகின்றது என்ற செய்தியை நாட்டு மக்களுக்கு சொல்லி நிற்கின்றது. எனவே ரணில் அரசாங்கத்தின் சம்பள அதிகரிப்பாலோ, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பாலோ எந்தவொரு மாற்றமும் நிகழப்போவதில்லை. ஒரு கையால் கொடுத்து மறுகையால் இரண்டு மடங்காகப் பிடுங்கப் போகின்றது. மக்களை முட்டாள்கள் எனக் கருதி இப்படியான சகுனி ஆட்டங்களில் ஈடுபடும் ஆட்சியாளர்களை வாக்கு ஆயுதத்தால் மக்கள் தண்டிக்கவேண்டும்.




## சமூக ஊடகங்களில் சட்டமீறல் பொலிஸாருக்கு வழிகாட்டுதல்

கொழும்பு, செப்.6

**தேர்தல்கள் தொடர்பில் சமூக ஊடகங்களில் இடம்பெறும் மீறல்களை கையாள்வது குறித்து பொலிஸ் நிலையங்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஜனாதிபதித் தேர்தல் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் பரப்புரைகளின் பிரதான தளமாக சமூக ஊடகங்கள் மாறியுள்ளன. வேட்பாளர்களை இலக்குவைத்து விமர்சனங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கும் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் சமூக ஊடகங்கள் தொடர்பான முறைப்பாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த வழிகாட்டுதல்களை பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கியுள்ளது. சர்ச்சைக்குரிய பதிவுகள் மற்றும் அவற்றை நீக்குவது தொடர்பிலும் பொலிஸ் தலைமையகம் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. (எ-இ)

## தேர்தல் விதி மீறல்கள் இதுவரை 22 பேர் கைது

கொழும்பு, செப்.6

தேர்தல் சட்டவிதிகளை மீறிச் செயற்பட்ட 22 பேர் இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். தேர்தல் சட்ட விரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 4 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. தேர்தல் தொடர்பில் மொத்தம் 173 முறைப்பாடுகள் இதுவரை பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. அவை வன்முறைச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## பொதுச்சொத்து துஷ்பிரயோகம் அதிகரிப்பு

கொழும்பு, செப்.6

தேர்தல் பிரசார காலத்தில் பொதுச் சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பாக டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் கடும் கரிசனை வெளியிட்டுள்ளது. பொதுச் சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பான 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் ஸ்ரீலங்காவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நதிசானி பெரேரா தெரிவித்துள்ளார். (எ)

## போலித் தகவல்களை பகிர்ந்தால் நடவடிக்கை

கொழும்பு, செப்.6

தேர்தல் முடிவுகள் தொடர்பாக தவறான மற்றும் போலியான தகவல்களை பரப்புவது கடுமையான குற்றம் என்றும் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது. தபால் வாக்குப் பதிவை மையப்படுத்திய பெறுபேறுகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்காக தபால் மூல வாக்குப் பதிவு முதற்கட்டமாக நடத்தப்பட்ட போதிலும், செப்ரெம்பர் 21ஆம் திகதி வாக்குப் பதிவு நிறைவடைந்த பின்னரே அவை கணக்கிடப்படும் என்று தெரிவித்துள்ளது. (எ-இ)

## வாக்களிப்பில் அசம்பாவிதம் நடந்தால் முறையிட முடியும்!

கொழும்பு, செப்.6

தபால்மூல வாக்களிப்பின்போது ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் அது தொடர்பில் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி அல்லது மாவட்டச் செயலருக்கு அறிவிக்கமுடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்னாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உரிய அரச அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தொலைபேசியின் ஊடாகவும் அவ்வாறான தகவல்களை வழங்கமுடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (எ-இ)

### நாளை

07.09.2024

சனிக்கிழமை - ஆவணி - 22

சுபநேரம் : 03.04 - 04.34

ராகுகாலம் : 09.04 - 10.34

### நாளொரு நல்வார்த்தை

கடவுளுக்கு தரும் காணிக்கையை விட ஒரு ஏழைக்கு தரும் கல்வி மேலானது.

- அம்பேத்கர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவமான வாழ்வுக்கு வழியேற்படுத்தப்படும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, செப்.6**

**இன, மத, குல, வகுப்பு, கட்சி பேதமின்றி இளைஞர்களுக்காக, யாருக்கும் அடிமைப்படாது, அடிபணியாது, சுதந்திரமான சமூக வாழ்க்கைக்குள்ளும், ஜனநாயக வாழ்க்கைக்குள்ளும், நுழைவதற்கும் தன்னம்பிக்கையோடும், சுயமாகவும் எழுந்து நின்று கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுப்போம் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் கொள்கைப் பிரகடன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் கொள்கைத் திட்டத் தயாரிப்பின் போது முன்னோடிகளாக இளைஞர்களை நியமித்து, தற்காலத்திலும் எதிர்காலத்திலும் பொறுப்புகளை ஏற்கக் கூடிய தலைவர்களாக மாறுவதற்கான சூழ்நிலைக்குள் அவர்களை பிரவேசிக்கச் செய்வோம்.

நாம் ஒரு மில்லியன் தொழில் முனைவோர்களை உருவாக்குவோம். அவர்களை பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் பங்காளர்களாக மாறுவதோடு, தலைவர்களாகவும் அவர்கள் மாற்றப்படுவார்கள் - என்றார். (எ-இ)

# 'மாற்குவின்' போர்க்கால ஓவியங்கள்

யாழ்ப்பாணம், செப்.6

நான்காம் ஆண்டு கலைவரலாற்றை கற்கும் சிறப்புக் கலை மாணவர்களின் கற்கையின் ஒரு பகுதியாக 'அசாதாரணங்களின் காலம் மாற்குவின் போர்க்கால ஓவியங்கள்' எனும் தலைப்பில் ஓவியர் மாற்குவின் ஓவியக் காட்சி யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைக் கூடத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. கண்காட்சியில் இலவசமாக பங்குபற்ற முடியும் என நுண்கலைத்துறை தலைவர் பா.அகிலன் தெரிவித்தார். (எ-ரி)

# நினைவுநாளும் நினைவுப் பேருரையும்

யாழ்ப்பாணம், செப்.6

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும், நினைவுப் பேருரையும் வாழ்வகத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள செல்லா மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி ஜீவராணி புனிதா பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், இலங்கை, சிறப்பு விருந்தினர்களாக பாலசுந்தரம் ஜெயகரன் பிரதேச செயலர், பிரதேச செயலகம் வலி.தெற்கு, ஆ.சஞ்ஜீவன் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம், மகேசன் தயாகரன் பிராந்திய கடன் தலைமை அதிகாரி ஹற்றன் நஷனல் வங்கி, வட பிராந்தியம், எம்.எவ்.எம்.பிர்டவுஸ் பிரதான பொலிஸ் பரிசோதகர்.பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், சுன்னாகம், ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-45)

# பிரேமரத்ன வாகனம் மீது சூடு பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, செப்.6

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான உத்திக்க பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துக்கு உதவி செய்தார் என்று கூறப்படும் அநுராதபுரம் பொலிஸ் நிலைய முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சஞ்சீவ மகாநாமவுக்கு எதிராக இதற்கு முன்னர் அநுராதபுரம் பிரதான நீதவான் நீதிமன்றத்தால் வெளிநாட்டு பயணத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உத்திக்க பிரேமரத்னவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. (எ-இ)

# வீடு புகுந்து அடாவடி நகை, பணம் திருட்டு

பளை பிரதேசசபையில் பணியாற்றும் ஒருவரது வீட்டுக்குள் புகுந்த அடையாளம் தெரியாத நபர்கள் அங்கிருந்தவர்களை மோசமாகத் தாக்கியதோடு பணம், நகைகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் முகமாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. பளை பிரதேசசபையின் பணியாளர் மற்றும் அவரது மனைவி, தாயார், பிள்ளைகள் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-25, 9)

# பூசணி விலையில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப்.6

யாழில் பூசணிக்காயின் விலை வீழ்ச்சியால் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடை செய்யப்படும் பூசணிக்காய்கள் அதிகளவில் சந்தைக்கு கொண்டுவரப்படுகின்ற போதும் போதிய சந்தைவாய்ப்பின்றி அவை தேங்குகின்றன. அதே வேளை பயிற்றை, புடோல் போன்றவற்றின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (எ-25, 17)

# தயாசிறியின் கருத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

கொழும்பு, செப்.6

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சமீபத்தில் அரசாங்கத்துடன் இணைந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தொடர்பில் கருத்து வெளியிட்ட தயாசிறி ஜயசேகரவின் உரையை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதற்குத் தடை விதித்து கொழும்பு மாவட்ட நீவான்நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

அக்குரஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தொடர்பில் அவதூறான கருத்தை வெளியிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.


அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்த கருத்துகளால் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது என்றும், அதற்காக 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தாக்கல் செய்த முறைப்பாட்டைப் பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான காணொலிகளை தயாசிறி ஜயசேகரவின் முகநூல், ஐக்கிய மக்கள் சக்தியின் முகநூல் பக்கம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதைத் தடுத்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், அது 14 நாள்களுக்கு அமுலில் இருக்கும் எனவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.6

கந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தின் அலங்கார உற்சவத்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வில்லுத்தண்டிகையில் சுவாமி வெளிவீதி உலா வருவார். மறுநாள் திங்கட்கிழமை சண்டேஸ்வர உற்சவமும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் உற்சவமும் இடம்பெற்று திருவிழா நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,17)




# கருத்துப் பரிமாற்றச் செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் சாதாரணதர மாணவிகளுக்கான கருத்துப் பரிமாற்றச் செயலமர்வு நல்லூர் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது. செயலமர்வில் 80க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்குபற்றினர். (எ-ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுக்குடியிருப்பு

அந்நியராட்சிக்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தின் கரிக்கட்டு மூலைக்கும் கருநாவல் பற்றுக்கும் இடையிலிருந்த பிரதேசம் தாழ்நிலப் பிரதேசமாக இருந்தமையினால் மக்களின் மானாவாரி விவசாயம் அழிந்த காரணத்தினாலும் வெள்ளப்பெருக்கு மற்றும் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாகவும் அங்கிருந்து மக்கள் வெளியேறி மேட்டுநிலப்பகுதியில் குடியேறினர். அவர்கள் புதிதாக குடியேறிய அப்பகுதியே பின்னர் புதுக்குடியிருப்பு என அழைக்கப்பட்டதாக வரலாற்று ஏடுகளில் கூறப்பட்டுள்ளது.

இன்று புதுக்குடியிருப்பு நகரம் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நகரமாக மாறி உள்ளதுடன், பொருளாதார நடவடிக்கைகளின் மையமாகவும் அமைந்துள்ளது. உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளின் வரிசையில் இடம்பிடித்த இலங்கையின் முதல் வங்கியான கொமர்ஷல் வங்கி, இப்பகுதிக்கு உலகத்தரம் வாய்ந்த வங்கிச் சேவைகளை வழங்கும் நோக்கில் 1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு எனும் முகவரியில் இன்று காலை சுப நேரமான 8.51 மணிக்கு தனது புதிய கிளையை மங்களகரமாகத் திறந்து வைக்கின்றது.

தொலைபேசி இலக்கம்: 021-206 1201

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்கப் பணிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, செப்.6**

**ஜனாதிபதித் தேர்தலின் போது, அரச மற்றும் தனியார்துறைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க தொழில் வழங்குநர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.**

வேதனம் மற்றும் சொந்த விடுமுறையை இழக்காத வகையில் வாக்காளர்களுக்கு, தமது வாக்கை அளிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு, விசேட விடுமுறை தொடர்பான தாபன விதிக்கோவையில், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தொடர்ச்சியாக 4 மணிநேரம் தேவை என்பதால், அன்று விசேட விடுமுறை வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் தனியார்துறை ஊழியர்களுக்கு அவ்வாறு எவ்வித எழுத்துமூலக் கட்டளைகளும் இன்மையால், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கடந்த காலங்களில் ஏற்படுத்திய உடன்பாட்டுக்கு அமைய, இந்தத் தேர்தலிலும் அதனைக் கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.02.1945

மறைவு 04.09.2016

அமரர் V.P. வேலாயுதம்பிள்ளை

(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)

திதி : வளர்பக்க திருதியை

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

இல.35/6, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை பேரின்பநாயகம்

வேலணை மேற்கு, 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பேரின்பநாயகம் அவர்கள் கடந்த (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (பிள்ளைகுட்டியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு கணவரும், அமரர் நவரத்தினம்மா, அமரர் நாகநாத பிள்ளை, அமரர் விநாயகமூர்த்தி, அமரர் இராஜகோபால், பாலசுப்பிரமணியம், இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயரூபன் (சுவிஸ்), மதிரூபன் (பின்லாந்து), உதயரூபன் (லண்டன்), யசிரூபன் (பின்லாந்து), விஜரூபன் (லண்டன்), ஜெகரூபன் (பின்லாந்து, கபிலரூபன் (சுவிஸ்), தசவதனி (வவுனியா), கஜரூபன் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சனா, தர்சினி, ஸ்ரீதேவி, அமரர் சுபாசினி, சங்கீதா, அகல்விழி, ஞானேஸ்வரன் (பிரதி அதிபர், வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜன், கபிலாஷ், ஜதீசன், யுகன், சினோஜா, ஜிந்துயன், யதுசாயி, யதுமிலன், மிதுனன், லதுஷன், ஹரிஷ், தனுசன், சாய்சுருதி, கிஷாயினி, தஷானா, யக்ஷிகா, பிரமிகா, வினிஷ், சர்வினா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் சண்முகநாதன், அமரர் விஜயலக்ஷ்மி, அமரர் பூபதி, திருவருட்செல்வி, சறோஜினிதேவி, கமலாதேவி, இராமச்சந்திரன், தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் தோணிக்கல் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைகளுக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு இல:
077 066 2819 (மகள்)
077 421 3931 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்


## தபால்மூல வாக்களிப்பு மன்னாரில் மந்தகதி



மன்னார், செப்.6

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தொடக்கம் வாக்குப் பதிவுகள் மந்த கதியில் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச அதிகாரிகள் வாக்களிப்பில் ஆர்வம் இல்லாமல் காணப்படும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தபால் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 7 இலட்சத்து 12 ஆயிரத்து 319 ஆகும். தகுதி உள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால் வாக்களிப்பில் கலந்து கொண்டு வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

(எ-25-56)

## 15 நாள்களுக்குள் வெட்டுப்புள்ளிகள்

கொழும்பு, செப்.6

2023 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்வரும் 15 நாள்களுக்குள் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்துக்கும் அதிகமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

(எ-45)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 11 1995

மறைவு 04 09 2020

தேவராசா ரதீஸ்வரன்

திதி:- வளர்பிறை திருதியை

மகனே நீ எங்களை விட்டு பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன் கண்களில்
இருப்பாய் கண்ணீராக
உன் இதயம் இந்த உலகில் இல்லாவிட்டாலும்
உன் நினைவில் தான் எங்கள் இதயமே துடிக்கின்றது

இல.92, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கடலை செய்கை பாதிப்பு

கிளிநொச்சி, செப்.6

பூநகரி செம்மங்குன்று பகுதியில் இருந்து வருகை தரும் கால்நடைகள் நிலக் கடலைச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று ஜெயபுரம் வடக்கு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து கால்நடைகளை கட்டுப்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(ரி-13)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகர் மத்தியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Cosmetics & Fancy மற்றும் **அன்பளிப்பு பொருட்கள் விற்பனை** ஸ்தாபனத்திற்கு அனுபவம் உள்ள **பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை.**

தொடர்புகளுக்கு: **077 993 7999**

(CS/28955) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

02.09.2024 பூநகரி வீதிக்கும், யாழ்ப்பாணம் சிவன் கோயில் வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலசிங்கம் குபேந்திரன் என்பவரது (621740903v) தேசிய அடையாள அட்டையும் NSB வங்கி புத்தகமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 272 7717**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும், பொருளாளராகவும் செயற்பட்டு நிர்வாக செயற்பாடுகளிற்கும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய

**செல்லப்பா தங்கராசா**

அவர்களது மறைவுச் செய்தி எமக்கு பேரிழப்பாக உள்ளது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையினர்**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்**
**முதலாய கோயில்கள், கைதடி.**

தோற்றம் 08.06.1940 — மறைவு 03.09.2024

(CS/56118) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 12 . 1933 — மறைவு 05 . 09 . 2024

### செல்வரத்தினம் தவமலர்

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் தவமலர் அவர்கள் நேற்று (05.09.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற செல்வரத்தினம் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், தவச்செல்வம் (ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), செல்வறஞ்சன் (ஓய்வு நிலை ஆசிரியர் யா/கைதடி விக்கினேஸ்வரா), செல்வறதி (சமுர்த்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), செல்வநிதி (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகலோசனி, துவாரகா, ராமகுமாரின் அன்பு மாமியாரும், அஜந்தன் (லண்டன்), தேனுகா, சங்கர் (லண்டன்), சிந்துசன் (வைத்தியர் USA), கஜானன் (பொறியியலாளர் லண்டன்), தனுஜன், சாருஜன், ஐஸ்ணவி (யா/இந்து மகளிர் கல்லூரி), டினோசிகன் (யாழ் மத்திய கல்லூரி), அருணன் (ஆசிரியர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஆர்த்திகா (வைத்தியர் USA), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நவரத்தினம் (ஆசிரியர்) அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**071 833 4376, 077 020 1366**
**077 616 5417**

**72, நாவலடி லேன்,**
**திருநெல்வேலி.**

(CS/28956) J-1

## மரண அறிவித்தல்

### திருமதி குமரகுருநாதன் புனிதவதி



அன்னையின் மடியில் 06.08.1946 — அம்மன் திருவடியில் 31.08.2024

இணுவில் மேற்கு பழமுதிர்சோலை பரமானந்தவல்லி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமரகுருநாதன் புனிதவதி அவர்கள் கடந்த 31.08.2024 சனிக்கிழமை பரமானந்தவல்லியம்மனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.S.K.நாதன் (மஸ்கெலியா/ சரஸ்வதி கலாமன்றம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - கனகம்மா தம்பதியினரின் (நாயன்மார்கட்டு) அன்பு மருமகளும், Dr.கு.சந்திரகுமார் (DTCO- Chest Clinic, பொது வைத்தியசாலை வவுனியா) Dr.செ.தனவந்தி (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) த.செல்வந்தி (இரசாயன பகுப்பாய்வாளர் - CPL கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கந்தையா விவேகானந்தன் (ஈழபதீஸ்வரர் wembly London) ஆகியோரின் அன்பு சகோதரியும், ச.சர்வலோஜினி ( சாந்தி, சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட செயலகம், வவுனியா), Prof இ.செந்தில்நிதி (இரசாயனவியல் துறை- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கொழும்பு), சி.தயாளன் (பெறியியலாளர் BELL Canada) ஆகியோரின் அன்பு மாமியும், ச.லோஜிகன் (மருத்துவபீடம் B.S.M.U. Belarus), செ.அஞ்சனன் (றோயல் கல்லூரி கொழும்பு) த.லக்ஷிகன் (பொறியியல் பீடம், குயின்ஸ் பல்கலைக்கழகம் கனடா), த.யனுஷிகன் (பொறியியல் பீடம், குயின்ஸ் பல்கலைக்கழகம் கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சி.கனகரட்ணம் (ஆயுள்வேத வைத்தியர் உரும்பிராய்), சி.சுப்பிரமணியம் (சிறைச்சாலை அதிகாரி நுணாவில்), மயில்வாகனம் (வங்கி முகாமையாளர் - நாயன்மார்கட்டு), மற்றும் வி.ரேணுகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோபிதரன் கௌசிகா (லண்டன்) வி.நிஷாகரன் (பெறியியலாளர் British Gas லண்டன்), வி.ஹரிஹரன் (பெறியியலாளர் British Gas லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 05.09.2024 வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றைய தினம் மாலை அன்னாரின் பூதவுடல் அவரின் பிறப்பிடமான இணுவில் மேற்கு பழமுதிர்சோலை இல்லத்திற்கு எடுத்து செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.K.சந்திரகுமார் 0777146765
**அப்பலோ கிளினிக்**
**வைரவபுளியங்குளம், வவுனியா.**

**பழமுதிர்சோலை**
**பரமானந்தவல்லி அம்மன் கோயில்**
**அம்மன் கோயில் வீதி**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

Dr.செ.தனவந்தி - 077 345 0195
**வெள்ளவத்தை.**

**த.செல்வந்தி +14165007616**
**பிறம்ரன், கனடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி நேற்றுப் போராட்டம்!

கொழும்பு, செப்.6

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தவேளை இராணுவத்தால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிப் போராட்டமும் இடம்பெற்றது.**



1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக முகாமில் தஞ்சமடைந்தவர்களில் 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றலில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-இ)

# முத்துஐயன்கட்டு வீதியை புனரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.6

முல்லைத்தீவு, கற்சிலைமடுச் சந்தியிலிருந்து முத்துஐயன்கட்டுக்குச்செல்லும் வீதி முழுமையாக புனரமைக்கப்படாமையால் பயணங்களின்போது பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பேருந்து பயணிக்கக்கூடிய பிரதான வீதியான இந்த வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்வோர் பயணத்தின்போது சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மருத்துவமனைக்கு நோயாளர்களை அழைத்துச்செல்வதும் கடினமாக உள்ளது. வயல் நிலங்களுக்கு இயந்திரங்களை கொண்டுசெல்ல முடியாத நிலையும் நிலவுகிறது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-25, 500)

# குறும்படத் திரையிடலும் கலந்துரையாடலும்



யாழ்ப்பாணம், செப்.6

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சக வாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் விமல்ராச்சின் 'எழில்' குறும்பட திரையிடலும், ஈழ சினிமாக் கலைஞர்களின் படைப்புகள் தொடர்பான கலந்துரையாடலும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள 'ஈழத்திரை' செல்வா திரையரங்கில் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-45)



# உலருணவுகள் வழங்கிவைப்பு!

யாழ்ப்பாணம், செப்.6

வேலும்மயிலும் பவுண்டேஷன் நிறுவனத்தினரால் அமரர் சட்டத்தரணி மயில்வாகனம் வேலும்மயிலும் 35ஆம் ஆண்டு நினைவாக கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரதேசத்துக்குட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரத்தில் நலிவுற்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன (ச-45-100)

# சுகாதார நடைபயணம்

யாழ்ப்பாணம், செப்.6

உடற்பயிற்சி மருத்துவ தினத்தை முன்னிட்டு மானிப்பாய் நியூரோ றீகபிலிடேசன் சென்ரர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'ஆரோக்கியமான உடலுக்காக ஒன்றாக நடப்போம்' எனும் தொனிப்பொருளிலான நடைபயணம் சித்தங்கேணிச் சந்தியிலிருந்து மானிப்பாய் பசுமை நினைவு மருத்துவமனைவரை இன்று வெள்ளிக்கிழமை காலை 6. 30மணிக்கு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 0778194953 அல்லது 0212256990 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)



தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் எதிர்நோக்கும் காணி தொடர்பான பிரச்சினைகளை சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கேட்டறியும் கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-113)

# நல்லூர் ஆலயச் சூழலில் துள்ளல் இசைப் பாடல்கள்

*யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை*

யாழ்ப்பாணம், செப்.6

நல்லூர் ஆலயச் சூழலில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக யாழ். மாநகரசபையால் குத்தகைக்கு விடப்பட்ட வியாபார நிலையம் ஒன்று துள்ளல் இசைப் பாடல்களை ஒலிக்கவிட்டு இளையோரை தவறாக வழிநடத்தி வருகின்றது. இதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

நல்லூர்த் திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழலில் மாநகரசபையினால் கடைகள் குத்தகைக்கு வழங்கப்படும் போது, 'பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்' எனும் நிபந்தனையுடன் கடைகள் வழங்கப்படும்.

நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், மாநகரசபையினால் எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும் குறித்த வியாபார நிலையம் தொடர்பில் பல தடவைகள் யாழ். மாநகரசபையிடம் முறையிட்டபோதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திருவிழாக் காலங்களில் இரவு வேளைகளில் குறித்த வியாபார நிலையத்தில் துள்ளல் இசைப் பாடல்களை ஒலிக்கச் செய்வதனால் அவ்விடத்தில் கூடும் இளையோர் குத்தாட்டம் போடுவதுடன் அவ்வழியாகச் செல்லும் ஏனையோருக்கும் இடையூறையும் ஏற்படுத்துகின்றனர். எனவே இந்த தீய செயற்பாட்டுக்கெதிராக மாநகரசபையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-20,26)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப்.6

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைவ ஆன்மீகப் பிரசாரகர் அடிப்படைக் கற்கை நெறியை மேற்கொண்டு தகைமை பெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனின் மேற்பார்வையில் ச.லலீசன், கு. பாலசண்முகன், ரமணராஜா, கலாநிதி தி.செல்வமனோகரன், கலாநிதி ஜெயந்திரன், பிரம்மஸ்ரீ தி.மயூரகிரி சிவாச்சாரியார் ஆகியோர் கற்கைநெறியின் வளவாளர்களாகச் செயற்பட்டனர்.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ அமிர்தஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், சைவப்புலவர் கந்த சத்தியதாசன், ஓய்வுநிலை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-25, 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனா, பிரேசிலுடன் மட்டுமே அமைதிப் பேச்சுகளில் ஈடுபடுவோம்

## புடின் அறிவிப்பு



மொஸ்கோ, செப். 6

**உக்ரைனுடனான போரில், இந்தியா, சீனா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் மட்டுமே எம்முடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, உக்ரைனுடனான அமைதிப் பேச்சுகளை ரஷ்யா நிராகரிக்கவில்லை என்றும், ஆனால் மத்தியஸ்த முயற்சிகளில் சில நாடுகளை மட்டுமே அனுமதிக்க முடியும் என்றும் புடின் தெரிவித்துள்ளார்.

“உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரா என்று கேட்கின்றீர்கள். பேச்சுவார்த்தைக்கு நாங்கள் ஒருபோதும் மறுத்ததில்லை. ஆனால், சில இடைக்காலக் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் தயாரில்லை. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்” என்று புடின் தெரிவித்துள்ளார்.

“துருக்கியில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது நாங்கள் ஒரு உடன்பாட்டை எட்ட முடிந்தது. அதுதான் மையப் புள்ளி. துருக்கியில் எட்டப்பட்ட முடிவுகளை உக்ரைன் அங்கீகரித்தது. ஆனால் அமெரிக்கா ஏற்கவில்லை. நேட்டோ நாடுகளும் அந்த உடன்படிக்கையில் திருப்தியடையவில்லை. ஏனெனில் ரஷ்யா தோற்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அதனால்தான் போர் உண்டானது” என்றும் புடின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## மருந்துகள் வழங்கக்கோரி மருத்துவர்கள் கவனவீர்ப்பு

மன்னார், செப்.6

மருந்துக் கொள்வனவில் உள்ள முறைகேடுகளைத் தடுக்கக் கோரி மன்னாரில் நேற்று மருத்துவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'நியாயமான குரல்களை நசுக்காதே' 'தொழிற்சங்க உரிமைகளை நசுக்காதே' ' மருந்துக் கொள்வனவில் உள்ள ஊழலைத் தடுப்போம்' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணிமுதல் பி.ப. ஒரு மணிவரை நோயாளர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், உணவு இடைவேளையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடு பூராகவும் மருத்துவமனைகளில் நோயாளிகள் தகுந்த முறையில் மருந்துகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். மன்னார் மருத்துவமனையிலும் இந்த நிலைமையே இருக்கின்றது. அரச மருத்துவமனைகளுக்குச் சரியான முறையில் மருந்து வகைகளை வழங்காமையால் நோயாளர்களுக்கு தகுந்த பதில் அளிக்க முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். உண்மை நிலைமையை வெளிக்கொணரும் வகையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (எ-60)





## சோப், ஷம்போவுக்கு எஸ்.எல்.எஸ். கட்டாயம்

கொழும்பு, செப்.6

அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து சோப்புகள், ஷம்போக்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கு எஸ்.எல்.எஸ். சான்றிதழ் கட்டாயமாக்குவதற்கு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். இலங்கை தர நிர்ணய பணியகத்தின் பரிந்துரைகளின்படி, இலங்கைச் சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் சோப்புகளின் ரி.எவ்.எம். பெறுமதி 78 ஆக இருக்கவேண்டும்.

எவ்வாறாயினும், நாட்டில் உள்ள பிரதான சோப்பு உற்பத்தி நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்பட்ட குழந்தை சோப்பை நுகர்வோர் விவகார அதிகார சபை பரிசோதித்தபோது அதன் ரி.எவ்.எம். பெறுமதி 63 எனக் கண்டறியப்பட்டுள்ளது அதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது. (எ-இ)

## வலுவடைகின்றது யாகி!

பீஜிங், செப். 6

சீனாவின் தெற்குப் பகுதிக்கு நெருக்கமாக யாகி என்ற புயல் வலுவடைந்து வருகின்றது என்றும், இன்றையதினம் புயல் கரையைக் கடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னாயத்த நடவடிக்கையாக பாடசாலைகள், விமான நிலையங்கள் என்பன பூட்டப்பட்டுள்ளன. (ம)

## கொங்கோவுக்குத் தடுப்பூசி

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில், குரங்கம்மைத் தொற்று தீவிரம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விரைவில் இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீராங்கனை படுகொலை



உகண்டாவுக்கு ஒலிம்பிக்கில் பெருமை தேடிக்கொடுத்த, ரெபெக்கா செப்டிகே என்ற வீராங்கனை அவரது காதலனால் எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். காணிப் பிரச்சினையே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இஸ்ரேலியத்தூதரகத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூடுகள்

பெர்லின், செப். 6

ஜேர்மனியின் மியூனிச் நகரில் உள்ள இஸ்ரேலிய துணைத் தூதரகத்துக்கு அருகில் நேற்றுத் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஜேர்மனியின் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி!

யாழ்ப்பாணம், செப்.6

இருபாலை - கோப்பாய் கற்பகபிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள விநாயகர் சதுர்த்தி பிள்ளையாருக்கு தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு விசேட அபிசேகமும், விசேட பூசை வழிபாடுகளும், மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையும் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)



நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோண்டாவில் சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் போசணைமிக்க இலைக்கஞ்சி தயாரித்தல் மற்றும் அதில் அடங்கியுள்ள போசணைக்கூறுகள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது. சுதேச மருத்துவ நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந் நிகழ்வு நடத்தப்பட்டது.

(ச-45-66)



# தபால்மூல வாக்களிப்பு வட்டுக்கோட்டையில் மும்முரம்

யாழ்ப்பாணம், செப்.6

இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்த நிலையில், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ள வாக்களிப்பு நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை ஆசிரியர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றது. மாவட்ட செயலக அலுவலகங்கள், தேர்தல் ஆணைய அலுவலகங்கள், மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகங்கள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள், காவல் நிலையங்கள், சிறப்பு அதிரடிப் படை முகாம்கள், சிறப்புக் காவல் பிரிவுகள் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் தபால்மூலம் வாக்களிக்கமுடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

(எ-25-27)



# விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

திருகோணமலை, செப்.6

தற்கொலைக்கு எதிரான விழிப்பு ணர்வு தொடர் சைக்கிளோட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையை வந்தடைந்தது.

தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும், தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்க ளுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையினை ஏற்படுத்துவதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனமான ரோட்டரிக் கழக அனுசரணையுடன் இவ் விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக்கப்பட்டது.

(ச-45)

**வீட்டு வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரித்தல், வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல் மற்றும் இதர வீட்டு வேலைகள் செய்வதற்கு பணியாளர் உடன் தேவை.

**078 73 11 049**

**உதவியாளர் தேவை**

வழிச்சீராக்கி (எயார் கண்டிசன்) திருத்தும் ஒருவருக்கு உதவியாளர் ஒருவர் தேவை. துறைசார் கற்றலில் ஈடுபடுபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வெல்டிங் வேலை தெரிந்தவர்களும் தேவை.



**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு:- **071 220 0008**

## விலைக்கேள்விக்கான கோரல்(2024/01)
## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின் பகுதி 04 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மேலதிக தகைமைத் தேவைகள் SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் பகுதி 05 இலும் (Schedule) குறிப்பிடப்பட்டுள்ளன.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் 2024-09-06ல் இருந்து 2024-09-23 ஆம் திகதி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021205 7102, தொலைநகல் 021 205 7103)** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட 2024-09-06ல் இருந்து 2024-09-23 ஆம் திகதி வரை சமர்ப்பித்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 13-09-2024 ஆந் திகதியில் நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2024-09-06 until 2024-09-23 | | | | |
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2024-09-13 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2024-09-24 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | | Bid Validity Period |
| | | | | | | Security Amount | Validity Period | |
| MRC/NP/B/PCS/JA/01/2024 | Repair works at Certified School Atchuvely - Department of Probation and Child Care Services (NP) | 4.27 | 60 Days | C8 and C7 (Buildings) | 3,500.00 | 43 ,000.00 | 23-12-2024 | 25-11-2024 |

"விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பதால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரமுன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii)ல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

தவிசாளர்
திணைக்களப் பெறுகைக்குழு
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள்
திணைக்களம் வடக்கு மாகாணம்,
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,
யாழ்ப்பாணம்.

(CR/43169) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகல் கடலில்

# காணாமற்போன இளைஞன் சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப். 6
மாதகல் கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமற்போன இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நாகராஜா பகீரதன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
நேற்றுமுன்தினம் அதிகாலை மாதகலில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற இளைஞர்கள் பயணித்த படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. நீந்தி வந்த ஒருவர் மீனவர்களால் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்ட நிலையில், இன்னொருவர் காணாமற்போயிருந்தார். அவரே நேற்றையதினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

## வரலாற்றைத்...

தேர்தல் பரப்புரைகளுக்காக வடக்கு மாகாணத்துக்கு வருகைதந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்க, உதயன் பணிமனைக்கும் நேற்று வருகைதந்து, செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டார் இதன்போதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"தெற்கில் இம்முறை பலமான மாற்றம் ஏற்பட ஆரம்பித்துள்ளது. தபால் வாக்களிப்பில் 75 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை நாங்கள் கைப்பற்றியுள்ளோம் என்பதை எம்மால் உணர முடிகின்றது. நிச்சயம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவோம். ஆனால், அதற்கு தமிழ் மக்களுடைய ஒத்துழைப்பும் எமக்குத் தேவை.
2010, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது, தமிழ் மக்களின் வாக்குகள் ராஜபக்சக்களுக்கு எதிரானதாக இருந்தன. அதில் ஒரு நியாயம் இருந்தது. எம்மால் அதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆனால், இம்முறை நிலைவரம் அவ்வாறில்லை. மாற்றத்துக்கான நேரம் இது. நாட்டின் ஊழலைத் துடைத்தெறிய வேண்டிய நேரம். தெற்கு மக்கள் அதற்குத் தயாராகிவிட்டார்கள். எனவே தமிழர்களும் இந்தப் பணியில் தம்மை இணைத்துக்கொள்ளவேண்டும்.
ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்று முடிவெடுக்கும் உரிமை ஒவ்வொரு தனிநபருக்கும் உண்டு. அதே நேரம் அவர்களின் முடிவை சரியானது தானா என்று கேள்விக்கு உட்படுத்தும் உரிமையும் எமக்கு உள்ளது. அதனால் தான் தமிழர்கள் நன்கு சிந்தித்து இந்தத் தேர்தலில் வாக்களிக்கவேண்டும்.
வடக்கு மக்களும் எம்முடன் இணைவார்கள். அவர்களை இணைத்துக்கொண்டு பயணப்படுவோம் என்று நாம் காத்திருக்கும்போது தமிழரசுக் கட்சியினர் துரதிர்ஷ்டவசமாக சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை அறிவித்திருக்கின்றனர். அன்று ராஜபக்சக்களுடன் இருந்த முகங்கள்தான் இன்று சஜித்துடன் இருக்கின்றன. பொதுஜன பெரமுனவின் உயர் தலைவர்களில் ஒருவராக இருந்த ஜி.எல்.பீரிஸ் இன்று சஜித்துடன் உள்ளார். சம்பிக்க ரணவக்கவாலும், ரிஷாத் தாலும் ஒரே அணியில் செயற்பட முடியுமா? ஆனால் அவ்வாறான அணியொன்றையே சஜித் உருவாக்கியுள்ளார். தேர்தல் இலாபங்களுக்காக அந்த அணி உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் கொள்கையுடையவர்கள். எம்முடன் இணைவதற்கு கொள்கைகள் தான் பிரதானம். ராஜபக்சக்களிடம் இருந்து சஜித் அணியில் இணைந்த பலரும் எம்முடன் இணைவதற்கு வந்தனர். ஆனால், நான் அவர்களைக் கிட்டவும் எடுக்கவில்லை. இவ்வாறான அரசியல் செய்யும் சஜித்துக்கு தமிழரசுக் கட்சி தனது ஆதரவைத் தெரிவித்திருப்பதானது எனது ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் தருகின்றது. எனவே, மக்கள் தான் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும்" - என்றார். (அ-ம)

## ஊடகப்...

உதயன் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான அடக்குமுறைகள் தாக்குதல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் படுகொலைகள் தொடர்பில் அநுரவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே ஊடகப் படுகொலைகள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பில் மிக ஆழமான விசாரணைகள் நடத்தப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்து நீதி நிலைநாட்டப்படும் என்பதில் நான் மிக ஆழமான உறுதியுடன் உள்ளேன். இந்தக் குற்றங்கள் நிகழ்ந்து எத்தனை வருடங்கள் கடந்திருந்தாலும் நிச்சயமாக நீதியென்பது நிலைநாட்டப்பட்டே தீரும். அனைத்து வழக்குகள் தொடர்பிலும் நான் தீர்க்கமாக விசாரிப்பேன்" - என்றார்.
இதன்போது உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த அறிக்கையொன்று உதயனின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனால் அநுரகுமாரவிடம் கையளிக்கப்பட்டது. (அ-ம)

## போதைப்...

சாம்ராஜ்யம் அடியோடு துடைத்தெறியப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"போதைப்பொருள் கடத்தலில் சம்பாதிக்கப்படும் பணம்தான் இன்று பல அரசியல்வாதிகளின் பரப்புரைகளுக்குப் பயன்படுகின்றது. போதைப்பொருளின் பின்னணியில் அரசியல்வாதிகளே உள்ளனர். போதைப்பொருள்கள் இலங்கைக்குரியனவையா? இல்லை. அவை கொண்டுவரப்படுகின்றன. அதை அனுமதிக்கின்றனர். எனவே ஆட்சிக்கு வந்தும், போதைப்பொருள் குழுக்கள் அடியோடு துடைத்தெறியப்படும். இந்த உத்தரவாதத்தை நான் மக்களுக்கு உறுதியுடன் தருகின்றேன்" - என்றார். (அ-ம)

## போர்க்...

புடைய விடயம் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அநுரகுமார அண்மையில் வழங்கிய செவ்வியொன்றில், போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. அவர்கள் எவரையும் தண்டிக்கவேண்டும் என்று கோரவில்லை. எனவே, போரில் என்ன நடந்தது என்று வெளிப்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். அவரின் இந்த செவ்வியை மேற்கொள்காட்டி, 'இறுதிப்போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்கும் நிலைப்பாட்டில் நீங்கள் இல்லையா?' என்று ஊடகவியலாளர்கள் வினவினார்கள். இதற்குப் பதிலளிக்கும்போதே, "இறுதிப்போரின்போது என்ன நடந்தது என்பதை கண்டறிவதும் வெளிப்படுத்துவதும்தான் என் வேலை. தண்டனை வழங்குவது நீதிமன்ற சுயாதீனத்துடன் தொடர்புடைய விடயம். நான் போர்க்குற்றவாளிகளைக் கண்டறிவேன். நீதிமன்றங்கள் அவர்களைத்தண்டிக்கும்"என்று அநுர தெரிவித்துள்ளார். (அ-ம)

## கண்ணிவெடி...

முல்லைத்தீவு - மாங்குளம், துணுக்காய் பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண் பணியாளர்கள் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.
காயமடைந்த நால்வரில் மூவர் மாங்குளம் ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-ம-27)

## நான்கு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவில் மதுபோதையில் குழப்பங்களை விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில், பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் உட்பட நான்கு மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
சர்வதேசத்திரைப்பட விழாவுக்கு வருகை தந்தவர்களை தகாத வார்த்தைகளால் வசைபாடியமை மற்றும் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமை தொடர்பில், திரையிடலைக் காண்பதற்கு வருகைதந்தவர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே அவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம)

## 4 இராஜாங்க...

இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் ஆகியோரே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இவர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கைவிடப்பட்ட...

மானிப்பாய் வீதியிலுள்ள உதயதாரகை சனசமூக நிலையத்தில் தஞ்சமடைந்திருந்த அவரை, எந்தவொரு முதியோர் இல்லங்களும் பொறுப்பேற்கவில்லை. இதுதொடர்பில் கிராம அலுவலர் ஊடாக யாழ்ப்பாணம் பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தப்பட்டு அவர், பளையிலுள்ள முதியோர் இல்லத்தில் சேர்க்க நடவடிக்கை எடுத்தபோதும் அந்த முதியோர் இல்லமும் ஏற்கவில்லை. இந்த நிலையில் பிரதேச செயலரின் தொடர் நடவடிக்கையால், கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்தில் அவர் நேற்று இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

## சங்கானையில்...

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் சங்கானை தேவாலய வீதியிலேயே இந்தத் திருட்டுகள் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. பொதுமக்கள் சந்தேகநபர் ஒருவரை பொலிஸாரிடம் பெயரிட்டுள்ளனர். அந்தத் தகவல்களின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

## தீயில்...

அந்த நபர், குடும்பத்தகராறு காரணமாக கடந்த மூன்றாம் திகதி தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு தினங்களாக சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சையின்போதே உயிரிழந்துள்ளார்.
யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினார்கள். (அ-ம-100)

## விக்னேஸ்வரன்...

செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெறமுடியாது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்படும். ஏற்கனவே நாடு சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கியுள்ளநிலையில்நாட்டுமக்கள் அதை விரும்பமாட்டார்கள்' என்று விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே, விக்னேஸ்வரன் கூறுவதை தமிழர்களே பொருட்படுத்துவதில்லை. நான் ஏன் பொருட்படுத்தவேண்டும் என்று அநுர தெரிவித்துள்ளார்.
இன்றைய உலகில் எந்தவொரு நாட்டையும் சார்ந்திருக்காமல் ஒன்றும் செய்ய முடியாது. அரசாங்கங்கள் இன்னொரு அரசாங்கங்களுக்குத்தான் ஆதரவை வழங்குகின்றன. தனி நபருக்கு அல்ல. ஆதலால், இந்தியாவுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய விடயங்களில் நான் இந்தியாவுடன் நெருக்கமாகவே பணியாற்றுவேன். சீனாவுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய விடயங்களில் நான் சீனாவுடன் நெருக்கமாகவே பணியாற்றுவேன் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை நசுக்குபவர்களே வாக்குக்கேட்டு வருகிறார்கள்!

*யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறையன் தெரிவிப்பு*

**கிளிநொச்சி, செப்.6**

**தற்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான அனைவரும் தமிழ்மக்களின் குரல்வளைகளைக் கடந்த காலங்களில் நசுக்கியவர்களே. தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட போது இவர்களும், இவர்களின் சந்ததிகளுமே ஆட்சியிலிருந்தனர்.**

-இவ்வாறு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.இளம்பிறையன் காட்டமாகத் தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் தமிழர் பிரதேசங்களுக்கு வருகை தந்து பொய் வாக்குறுதிகள் அளிப்பதும், காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான விசாரணையை நடத்துவோம் என்று சொல்வதும், கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வோம் என்று கூறுவதும் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றும் செயற்பாடாகவே உள்ளது. போரின்போது காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் குறித்த உண்மையை அரசாங்கம் இன்றுவரை கூறவில்லை. வழக்குத் தாக்கல், புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்தல் எதுவுமின்றி காலத்தை இழுத்தடிப்புச் செய்து வருகிறது.

வடக்கு - கிழக்கில் தமிழ் நீதிவான்கள் தங்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி விடுவார்கள் என்பதற்காக சகல வழக்குகளும் அநுராதபுரம் நீதிமன் றத்துக்கு மாற்றப்பட்டு தோல்வியடையச் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)



## நினைவு தினம்

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் முதலாவது பீடாதிபதி சோமசுந்தரம் கந்தையாவினது நினைவும், நினைவு விரிவுரையும் விவசாய பீடத்தின் பீடாதிபதி கெ.பகீரதன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கேட்போர் கூட மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நினைவு விரிவுரையை யப்பான் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி ஜசுஹிறோ மொறிட்டா "உலர் வலயத்தில் கால்நடை வளர்ப்பு" எனும் தொனிப்பொருளில் நிகழ்த்தினார். (ச-45-113)

## சமையலாள் தேவை

**கோப்பாயில் 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டுச் சமையலுக்கு பெண் தேவை. தேவை ஏற்படின் தங்குமிட வசதி ஒழுங்கு செய்து வழங்கப்படும்.**

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**



**தொடர்பு:- 071 220 0008**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிரதான காப்பெற் வீதி முகப்புடன்
**4 பரப்புக் காணி - நிலப்பரப்பு**
விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 1/2 KM தூரம்.
- வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்தது.
- உரும்பிராய்ச் சந்தியில் இருந்து கைதடிச் சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன். தொடர்புகளுக்கு:

**077 2880 152**
**077 2941 521**

CS (28954) 1-1

## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.6

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம், பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பெருவிழா மருதங்கேணிப் பிரதேச செயலரும், பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் மருதங்கேணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது 'கலைக்கதிர் இளம் கலைஞர்' விருது வழங்கப்பட்டது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஓய்வுநிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ச-25, 66-27)






## தொழுநோய் விழிப்புணர்வு மக்களுக்கு மிக அவசியம்!

*வவு.இந்து குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் சுட்டிக்காட்டு*

தொழுநோயாளிகள்மற்றும்அவர்களின்குடும்பத்தினர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையைத் தவிர்ப்பதற்கு அனைவருக்கும்

அந்தநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது இன்றியமையாததாகும் என்று வவுனியா இந்து குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் சுப்ரமணிய சர்மா குருக்கள் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற தொழுநோய் முகாமைத்துவம் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாடு எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழுநோய் என்பது ஒரு தொற்று நோய். இது எளிதில் சுவாசம் மூலம் பரவக்கூடியது. ஆனால் அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை மேற்கொண்டால் முழுமையாக குணமடையக் கூடியது. எனவே இதுதொடர்பில் பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 214)


## முழங்காவிலில் புதிய பழச்சந்தை

பூநகரிப் பிரதேசசபையால் முழங்காவில் பொதுச் சந்தையில் பழக்கடைத் தொகுதி அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பழங்கள், வெற்றிலை மற்றும் மரக்கறிகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் இடமாக முழங்காவில் காணப்படுகின்றது. தற்போது அமைக்கப்பட்டுவரும் பழக் கடைத் தொகுதி ஊடாக பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது. (ச-25,13)

## மரண அறிவித்தல்

### முருகேசு தனபாலன்

(முன்னாள் கணித ஆசிரியர், சென் பற்றிக்ஸ் கல்லூரி,
ஓய்வு நிலை உத்தியோகத்தர் சுகாதார திணைக்களம் - கிளிநொச்சி)



கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தனபாலன் அவர்கள் நேற்று (05.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 7, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.